# மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சங்ககிரி

**அசல் வழக்கு எண் 130/2016**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | .. | **லோகநாதன்** | மதம் | .. | **இந்து** |
| தந்தை / கணவர் பெயர் | .. | **பேராகவுண்டர்** | தொழில் | .. | **விவசாயம்** |
| வயது | .. | 77 | ஜாதி | .. | |
| கிராமம் | .. | **தேவண்ணகவுண்டனூர்** | நாள் | .. | 22.11.2023 |
| வட்டம் | .. | **சங்ககிரி** | | | |

2023 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 22-ஆம் நாள் புதன்கிழமை திரு. லோகநாதன் த/பெ. பேராகவுண்டர் என்பவரின் சாட்சிய வாக்குமூலம் 1969-ஆம் ஆண்டின் 44-வது ஏற்பாட்டின்படி திரு.இரா.ராதாகிருஷ்ணன், பி.எ.,பி.எல்., மாவட்ட உரிமையியல் நீதிபதி, சங்ககிரி அவர்களால் ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

வாதிகள் தரப்பு 1 ஆம் சாட்சியின் முதல் விசாரணை

நான் இவ்வழக்கில் 1 ம் வாதி ஆவேன். நான் இவ்வழக்கில் வாதிகள் தரப்பு 1 ஆம் சாட்சி ஆவேன். எனது தரப்பு சாட்சியத்தை நிரூபண பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். சாட்சிய நிரூபண பிரமாண வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். அதில் உள்ள விபரங்கள் அனைத்தும் எனக்கு நன்கு தெரியும். அந்த விபரங்கள் என்னால் சொல்லப்பட்டவைதான். எனது சாட்சியத்தை ஏற்றுக்கொள்ள வேண்டுகிறேன்.

1) 19.05.1977 தேதியிட்ட கிரைய ஆவணம் அசல் **வா.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

2) 26.05.1983 தேதியிட்ட வழக்கு ஏ பட்டிகை சொத்திற்கான பட்டா அசல் **வா.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

3) 1 ம் வாதி செலுத்திய கந்தாய ரசீதுகள் அசல் (7 எண்ணிக்கை) **வா.சா.ஆ.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

4) 20.09.2000 தேதியிட்ட கிரைய ஆவணம் சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.4** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

5) 16.03.2016 ம் தேதியில் வழக்கு ஏ பட்டிகை சொத்திற்கு வழங்கப்பட்ட பட்டா ஆவண எண் 1237 க்கான கணினி வழி நகல் **வா.சா.ஆ.5** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

6) 16.03.2016 ம் தேதியில் சர்வே எண் 70/2B க்கான பட்டா எண் 2410 ன் கணினி வழி நகல் **வா.சா.ஆ.6** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

7) 1987 முதல் 2016 ம் ஆண்டு வரையிலான வில்லங்க சான்றிதழ் இணைய வழி நகல் **வா.சா.ஆ.7** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

8) 25.10.2006 தேதியிட்ட சர்வே எண் 69/3 க்கான பட்டா எண் 2424 ன் அசல் **வா.சா.ஆ.8** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

9) 09.11.2006 ம் தேதியிட்ட தானசெட்டில்மெண்ட் ஆவணம் அசல் **வா.சா.ஆ.9** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

10) சர்வே எண் 69/3A க்கான பட்டா எண் 1440 ன் கணினி வழி நகல் **வா.சா.ஆ.10** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

11) சர்வே எண் 69/3B க்கான பட்டா எண் 1642 ன் கணினி வழி நகல் **வா.சா.ஆ.11** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

12) 2 ம் வாதி பெயரிலான கந்தாய ரசீதுகள் அசல் (4 எண்ணிக்கை) **வா.சா.ஆ.12** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

13) வழக்கு மாதிரி வரைபடம் **வா.சா.ஆ.13** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

14) 27.11.2006 தேதியிட்ட குத்தகை ஒப்பந்த பத்திரம் உண்மை நகல் **வா.சா.ஆ.14** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க வா.சா.1 ன் குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.

ஒப்பம்/லோகநாதன்

ஒப்பம்/திரு.ஆர்.ராதாகிருஷ்ணன்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சங்ககிரி.